# True Disciple

# உண்மை சீஷன்

April - June 2023 ஏப்ரல் - ஜூன்

A Quarterly News Bulletin of City Revival AG Church



# தேவன் அன்பாகவே இருக்கிறார்.

பாஸ்டர். **ஜெரி டேனியல்**



அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! நம்முடைய தேவன் அன்புள்ளவர். அவருடைய பண்புகளில் உன்னதமானது அன்பு. தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார். (1 யோவான் 4:8). 1 யோவான் புத்தகம் அன்பின் புத்தகம் என்று அழைக்கப்படுகிறது. இதில் மட்டும் 46 முறை அன்பு என்ற வார்த்தை வருகிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார் என்ற வார்த்தை நமக்கு நம்பிக்கையும் உற்சாகத்தையும் அளிக்கிறது. தேவனுடைய அன்பு எப்படிப்பட்டது? அந்த அன்பிற்கு ஈடாக என்ன செய்ய வேண்டும் என்று உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## I. தேவன் நம்மில் அன்பாய் இருக்கிறார்

**1. தேவனுடைய அன்பு தியாகமான அன்பு:**

தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை நமக்காகக் கொடுத்து அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16 ; 1 யோவான் 4:9,10). இயேசு தம்முடைய ஜீவனை நமக்காக சிலுவையில் தந்து நம்மீதுள்ள அன்பை வெளிப்படுத்தினார் (1யோவான் 3:16).

**2. நிபந்தனையற்ற அன்பு:**

நாம் பாவிகளாயிருக்கையில் இயேசு நமக்காக மரித்து, நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார் (ரோமர் 5:8). நம்முடைய நீதியின் அடிப்படையிலோ, நமது கிரியை, திறமை பின்னணியத்தின் அடிப்படையிலோ அவர் அன்பு கூறாமல், நம்மை நிபந்தனையற்ற முறையில் அன்பு கூர்ந்தார் என்று வேதம் கூறுகிறது (உபா. 7:7 ; 9:4,5, ; யோபு 7:17,18). அவர் ஜாதி, மத பேதமின்றி அனைவரையும் நேசிக்கிறார்.

**3. மன்னிக்கும் அன்பு:**

தேவனுடைய அன்பு மன்னிக்கும் அன்பு. நாம் மனந்திரும்பும்போது நாம் இருக்கிறவண்ணமாகவே ஏற்றுக்கொள்ளும் தகப்பனின் அன்பைப் போன்றது (லூக்கா 15:18-20). தன்னைக் காட்டிக் கொடுத்தவனையும் ‘சிநேகிதனே’ என்று அழைத்த அன்பு(மத்தேயு 26: 50). நம்முடைய பாவங்களை மன்னித்து மறந்துவிடுகிற அன்பு (ஏசாயா 38:17; எபேசியர் 4:32).

**4. ஆசீர்வதிக்கும் அன்பு:**

தேவன் தம்முடைய அன்பினால் நம்மை ஆசீர்வதிக்கிறார். நம்மேல் மனதுருக்கம் உடையவராய் நம்மை விசாரித்து நம்முடைய தேவைகளைச் சந்திக்கிறவராயிருக்கிறார் (உபாகமம் 7:13; ரோமர் 8:32; மத்தேயு 7:11; 1பேதுரு 5:7; நெகே. 9:7-21).

**5. சிட்சித்துப் பரிசுத்தமாக்கும் அன்பு :**

நான் நேசிக்கிறவர்களெவர்களோ, அவைகளைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (வெளி. 3:19; எபி. 12:6). நமது நன்மைக்காகவும், நாம் மேலும் பரிசுத்தமடைந்து, அதிகக் கனிகளைக் கொடுக்கும்படியாகவும் தேவன் நம்மை அவ்வப்போது சிட்சித்து நம்மைச் சரியான பாதையில் நடத்துகிறார் (சங்கீதம் 119:67,71; 1 யோவான் 15:2).

## II. நாம் தேவனில் அன்பாய் இருக்கிறோமா ?

நம்மிடத்தில் அன்புகூறும் தேவன், நாம் அவரில் அன்புகூற வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நீ என்னை நேசிக்கிறாயா? (யோவான் 21 : 15-17) என்று பேதுருவிடம் கேட்ட இயேசு, நம்மையும் பார்த்து இன்று அதே கேள்வியைக் கேட்கிறார். தேவ அன்பு ஒரு விசுவாசியில் இருக்கும்போது அது குறைந்தது ஐந்து விதங்களில் வெளிப்படும்.

**1. நமது இரட்சகர் இயேசுவில் அன்பு (LOVE FOR THE SAVIOR) :**

அவர் முந்தி நம்மில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரில் அன்பு கூறக் கடமைப்பட்டிருகிறோம் (1 யோவான் 4:19). மத்தேயு 22:37-38ல் இயேசு, உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக என்று கூறினார். நாம் அவரோடு உறவுக் கொள்ளும்படி தேவன் நம்மை சிருஷ்டித்தார். நாம் அவரோடு ஜெபத்தில் நேரம் செலவிட வேண்டும். அவருடைய விருப்பத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற வேண்டும். நாம் இப்படி அவரில் அன்புகூற வேண்டும் என்று வேதம் பலமுறை நமக்குக் கூறுகிறது (உபா.6:5:10:12: 11:1,13,22; 19:8,9; 30:16,20; யோசுவா 22:5).

**2. வேதத்தின் மேல் அன்பு (LOVE FOR THE SCRIPTURES) :**

தேவனை நேசிக்கிறவர்கள் அவருடைய வார்த்தையையும் நேசிப்பார்கள். சங்கீதக்காரன் 119 ம் சங்கீதத்தில் 8 முறை, தான் வேதத்தை நேசிப்பதாகக் கூறுகிறான் (வசனம் 47, 48,97, 113, 119, 159,163, 167), தேவனுடைய வார்த்தையின் மேல் அவருக்கு இருந்த அன்பு அவருடைய வார்த்தையைத் தியானிக்கவும் அதற்குக் கீழ்ப்படியவும் அவரைத் தூண்டியது. தேவனை நேசிக்கிறவர்கள், அவருடைய வார்த்தையை வாசித்து, தியானித்து அதற்குக் கீழ்ப்படிவார்கள் நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாகும் (யோவான் 14:15; 1யோவான் 5:3). ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தை கைக்கொள்ளுவான். என்னில் அன்பாயிராதவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவன் அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் (1 யோவான் 2: 5).

**3. தேவாலயத்தின் மேல் அன்பு (LOVE FOR THE SANCTUARY) :**

நமக்குத் தேவன் பேரில் உள்ள அன்பு, நாம் அவருடைய ஆலயத்தை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறோம் என்பதில் விளங்கும். திருச்சபை இயேசுவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டது. தேவனுடைய

திருச்சபையைப் புறக்கணிக்கிறவர்கள் இயேசுவுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள் (எபிரெயர் 10:25). தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதனாகிய தாவீது, நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கிருப்பதையே நாடுவேன் (சங்கீதம் 27:4) என்றும், கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்குஅவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன் (சங்கீதம் 122:1) என்றும் கூறுகிறான். தேவனை நேசிக்கிறவர்கள், திருச்சபையில் உற்சாகமாக ஊழியம் செய்வார்கள், திருச்சபையின் தரிசனத்தை நிறைவேற்றப் பிரயாசப்படுவார்கள், திருச்சபையின் ஊழியங்களுக்காக உற்சாகமாகக் கொடுப்பார்கள் (1 நாளாகமம் 29:3-7).

**4. தேவப் பிள்ளைகளின் மீது அன்பு (LOVE FOR THE SAINTS) :**

தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூறாமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புக் கூறுவான்? (1 யோ. 4:20) என்று வேதம் கூறுகிறது. நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்று வேதம் பலமுறை நமக்குப் போதிக்கிறது (யோவான் 13:34; எபேசியர் 5:2; 1 தெசலோனிக்கேயர் 4:9; 5:13; 1 தீமோத்தேயு 4:12; எபிரெயர் 10:24; 1 பேதுரு 1:22; 2:17; 1 யோவான் 4:20,21). நாம் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க வேண்டும். மற்றவர்களுடைய குறைவில் உதவி செய்ய வேண்டும் (யாக்கோபு 2:15;1 யோவான் 3:17; கலாத்தியர் 6:10). மற்றவர்களுடைய குற்றங்களை மன்னிக்க வேண்டும் (எபேசியர் 4:32).

**5. இரட்சிக்கப்படாத மக்களின் மீது அன்பு (LOVE FOR SINNERS / UNSAVED ) :**

இயேசு பாவிகளை இரட்சிக்கவே உலகத்தில் வந்தார் (1 தீமோ.1:15; லூக்கா 19:10). தேவன் ஒவ்வொரு மனிதனும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார் (1 தீமோ.2:4). அவரை நேசிக்கிறவர்கள் அவருடைய இந்த இதயத் துடிப்பை அறிந்து செயல்படுவார்கள். இரட்சிக்கப்படாத நமது உறவினர்கள், நண்பர்கள் பட்டணத்தின், தேசத்தின் ஜனங்களுக்காக ஜெபிக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவுகிறது என்று கூறின அப்போஸ்தலனகிய பவுல் (2 கொரி.5:14), மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்தார், சுவிசேஷத்தை அறிவித்தார், கடினமாக உழைத்தார், தமது உயிரையும் கொடுத்தார். தேவ அன்பு நம்மை சுவிசேஷத்திற்காக உழைக்கவும் கொடுக்கவும் ஏவுகிறதா? தேவன் நம்முடைய வாழ்வை அன்பின் அடிப்படையில் அளக்கிறார். நமக்குச் சகல அறிவும் திறமையும் இருந்தாலும் அன்பில்லையெனறால் நாம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவின் கல்வாரி அன்பிற்கு ஈடாக நாம் என்ன செய்கிறோம்? அன்பில்லாதவன் தேவனை அறியான். ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4:8). இதோ, இவர் எவ்வளவாய் சிநேக்கிறார் என்று நம்மைக் குறித்துக் கூற முடியுமா?

## வேதத்தின் வழியில் பொருளாதார ஆசீர்வாதம்
## (நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து)

நீதிமொழிகள் புத்தகத்தில் சாலமோன் ஞானி நமது வாழ்க்கைக்கு தேவையான பல்வேறு ஆலோசனைகளை தேவன் அவருக்கு கொடுத்த ஞானத்திலிருந்தும் அனுபவத்திலிருந்தும் நமக்கு கூறுகிறார். அவைகளில் குறிப்பாக பொருளாதார ஆசீர்வாதங்களுக்கான வழிகளை தேவ ஆவியானவரின் உதவியோடு அவர் நமக்கு எழுதி வைத்துள்ளவைகளை இந்த செய்தியில் சுருக்கமாக உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவைகளை நாம் கைக்கொள்ளும்போது தேவன் நம்மை பொருளாதாரத்தில் தழைக்கச் செய்வார்.

**1. தேவனை உன் பணத்தினால் கனம்பண்ணு –**
**SERVE God with your finances honor**

தேவன் நமக்கு கொடுத்துள்ள வருமானத்தில் நாம் அவருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். 'உன் பொருளாலும் உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்' என்று நீதிமொழிகள் 3:9, 10 வசனங்கள் கூறுகிறது. தேவன் நம்முடைய தேவைகள் அனைத்தையும் சந்திக்க வாக்குப்பண்ணியுள்ளார் (பிலி.4:19; மத். 6:33). ஆனால் நாம் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

நாம் முதலாவது நம்முடைய தசமபாகங்களை ஆலயத்திற்கு கொண்டுவந்து தேவனுக்கு கொடுக்க வேண்டும். (மல்கியா 3:10; லேவி 27:30). தேவ ராஜ்யத்தின் பணிக்காக உற்சாகமாக நமது காணிக்கைகளைக் கொடுக்க வேண்டும். மேலும், நம்முடைய பணம் அனைத்தும் தேவன் நமக்கு தந்தது என்ற உணர்வோடு நல்ல உக்கிராணக்காரர்களாக உண்மையோடு பணத்தை கையாள வேண்டும். நாம் தேவனுக்கு பொருளாதாரத்தில் முதலிடம் கொடுக்கும்போதுதான் அவரே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணர் என்பதை நம் வாழ்வில் வெளிப்படுத்துகிறோம். அவ்வண்ணம் செய்யும்போது கர்த்தர் நமக்காக வானத்தின் பலகணிகளை திறந்து நம்மை ஆசீர்வதிப்பார்.

**2. கடினமாக வேலை செய்யுங்கள் - STRAIN every nerve**

'சோம்பற்கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான். சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும் என்று நீதிமொழிகள் 10:4 கூறுகிறது. சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமா புஷ்டியாகும் என்று நீதிமொழிகள் 13:4 கூறுகிறது. நம்முடைய வாழ்க்கையில் அறிவு, திறமைகள் இருந்தாலும் நாம் ஜாக்கிரதையோடு, சுறுசுறுப்பாகவும் கடினமாகவும் உழைக்காவிட்டால் பொருளாதார ஆசீர்வாதத்தை பெற முடியாது. சோம்பேறியை தரித்திரம்தான் தேடிவரும் என்று வேதம் கூறுகிறது (நீதி 6: 9-11; 18:9; 19:15; 20:4, 13; 21:4; 22:13; 24:30-34). எந்த ஒரு வேலையையும் அற்பமாக எண்ணாமல் கடினமாக உழைக்க வேண்டும். அதேசமயம், வேலைக்கு அடிமையாக மாறிவிட கூடாது (Workaholic). நமது சரீர, ஆவிக்குரிய, மனநிலை ஆரோக்கியத்திற்கு போதிய ஓய்வும் இளைப்பாறுதலும் அவசியம் என்று வேதம் போதிக்கிறது.

**3. சரியாகத் திட்டமிடுங்கள் - SKETCH out a plan**

நம்முடைய வருமானத்தைத் திட்டமிட்டு செலவிட வேண்டும் என்று வேதம் வலியுறுத்துகிறது. வெளியில் உன் வேலையை எத்தனப்படுத்தி, வயலில் அதை ஒழுங்காக்கி, பின்பு உன் வீட்டைக் கட்டு' என்று நீதிமொழிகள் 24:27 கூறுகிறது. ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் (ஆங்கிலத்தில் Careful Planning of the diligent) செல்வத்துக்கு ஏதுவாகும் என்று நீதிமொழிகள் 21:5ல் வாசிக்கிறோம். நாம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய, நம்முடைய வருமானத்திற்குள் செலவு செய்வது மிகவும் அவசியம். திருமணமான ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்க்கைத் துணையோடு உட்கார்ந்து வரவுசெலவை திட்டமிட வேண்டும். உணவு, உடை, பிள்ளைகளின் படிப்பு, பொழுதுபோக்கு, போக்குவரத்து, வீட்டு வாடகை, சேமிப்பு ஆகியவற்றை வருமானத்திற்குள் திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும். நாம் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்கு பார்க்க வேண்டும் என்று இயேசு கூறினார் (லூக்கா 14:30). மேலும் தேவன் நமக்குக் கொடுத்த வருமானத்திற்காக நன்றி செலுத்தி மனரம்மியத்தோடு வாழவேண்டும். மனரம்மியம் நித்தியவிருந்து என்று நீதிமொழிகள் 15:15 கூறுகிறது.

**4. ஏழைகளுக்கு இரங்குங்கள் - SUPPORT the needy**

'உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்' என்று நீதிமொழிகள் 11:25 கூறுகிறது. நீதிமொழிகள் 28:27ல் தரித்திரனுக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் என்று வேதம் கூறுகிறது. மேலும் ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் என்றும், ஏழையின் கூக்குரலுக்கு தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன் தானும் சத்தமிட்டு கூப்பிடும்போது கேட்கப்படமாட்டான் என்றும் வேதம் கூறுகிறது (நீதிமொழிகள் 19:17; 21:13). இந்த வசனங்கள் நாம் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஆதித்திருச்சபையைப் போல் நாமும் தரித்திரரை நினைத்துக்கொள்ள ஜாக்கிரதையாக இருக்கும்போது தேவன் நம்மேல் பிரியமாயிருப்பார். நம்முடைய ஆசீர்வாதத்தை பெருகச் செய்வார். வர்த்திக்கச் செய்வார் (கலா.2:10; 2 கொரி.9:7-10).

**5. எதிர்காலத்திற்காக சேமியுங்கள் - SAVE for the future**

மூடன் தன் வருமானத்தை சேமிக்காமல் அனைத்தையும் செலவழித்துப் போடுகிறான் (நீதிமொழிகள் 21:20). ஆனால் ஞானமுள்ளவனோ எறும்பைப்போல எதிர்காலத்திற்காக சேர்த்து வைக்கிறான் (நீதி. 6:6-8) என்று வேதம் கூறுகிறது. நமது வருமானத்தில் 10% தசமபாகம், 10% சேமிப்பு, 80% மற்ற செலவுகளுக்காக என்று திட்டமிடுவது நன்மைகளைக் கொண்டுவரும். எதிர்கால தேவைக்காகவும், எதிர்பாராத தேவைக்காகவும் சேமிப்பு அவசியம் (ஆதி.41:34-36).

**6. யூகித்து முதலீடு செய்வதை விட்டுவிடுங்கள் -**
**STEER CLEAR of Speculative Investments**

ஒரு காரியத்தில் நிச்சியமில்லாத பட்சத்தில் யூகித்து துணிந்து முதலீடு செய்வது ஆபத்தையும் பொருளாதார நஷ்டத்தையும் கொண்டுவரும்.

✦ **கடன் படாதிருங்கள் :**

கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை என்று நீதிமொழிகள் 22:7 கூறுகிறது. நீங்கள் ஏற்கனவே கடன்பட்டிருப்பீர்களானால் அதை அடைக்க முயற்சி எடுங்கள் (சங்கீதம் 37:21).

✦ **கையடித்து கொடுத்துப் பிணைப்படாதிருங்கள் (Co - Signing)**

கையடித்து உடன்பட்டு, கடனுக்காகப் பிணைப்படுகிறவர்களில் ஒருவனாகாதே. செலுத்த உனக்கு ஒன்றுமில்லாதிருந்தால் நீ படுத்திருக்கும் படுக்கையையும் அவன் எடுத்துக்கொள்ளவேண்டியதாகுமே என்று வேதம் எச்சரிக்கிறது. (நீதி 22:26, 27; 17:18)

✦ **தீவிரமாய் ஐசுவரியவானாகும் முயற்சியில் ஈடுபடாதிருங்கள்**

ஐசுவரியவானாக தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்கு தப்பான். உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் (நீதி. 28:20) என்றும், வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம். கைப்பாடாய்ச் சேர்க்கிறவனே விருத்தியடைவான் (நீதி. 13:11) என்று வேதம் கூறுகிறது. சூதாட்டம், பந்தயம் கட்டுதல், லாட்டரி போன்றவற்றில் விசுவாசிகள் ஈடுபடக்கூடாது. தீவிரமாக பணக்காரனாக வேண்டும் என்று தவறான வழிகளை முயற்சிக்காதீர்கள். உழைத்து முன்னேற பிரயாசப்படுங்கள். நீதிமொழிகள் 12:11; 23:4,5; 28:22 ஆகிய வசனங்களை வாசியுங்கள்.

**7. வீண் செலவை தவிர்த்திடுங்கள் - STOP Wasteful Spending**

பொருளாதாரக் குறைச்சலுக்கான காரணங்களில் ஒன்று வீண் செலவு செய்தல். அவசியமற்ற, உபயோகமில்லாத, தரமற்ற பொருட்களை தேவையின்றி வாங்க முயற்சிக்காதிருங்கள். பணத்தை ஒரு காரியத்திற்காக செலவழிக்கும் முன் ஜெபித்து, இது அவசியம் தானா? பிரயோஜனமாயிருக்குமா? கிறிஸ்தவ அறநெறியை பிரதிபலிக்குமா? வீண் செலவைக் கொண்டுவருமா? என்று குடும்பத்துடன் யோசித்து, செலவிடும்போது வீண் செலவைத் தவிர்க்க முடியும்.

**8. தேவனிடம் ஜெபியுங்கள் - SEEK God in Prayer**

இறுதியாக பொருளாதார ஆசீர்வாதத்திற்காக தேவனை நோக்கி ஜெபியுங்கள். தேவன் நமக்கு ஞானமும், பெலனும் தந்து நம்முடைய கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதித்து, வீண் செலவுகளுக்கு விலக்கி நம்மை காத்துக்கொள்ளாத பட்சத்தில் நாம் பொருளாதார ஆசீர்வாதம் பெற முடியாது. கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் (நீதிமொழிகள் 10:22) என்றும் கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் (நீதி. 28:25) என்றும் வேதம் தெளிவாக கூறுகிறது. கர்த்தர் ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவர் (1 சாமு. 2:7). ஐசுவரியம் தேவனாலே வருகிறது (1 நாளா. 29:12). ஆகவே நாம் ஜெபத்தில் தேவனை சார்ந்திருந்து, அவரை நம்பி, முயற்சி செய்யும்போது தேவன் நமக்கு ஐசுவரியத்தை சம்பாதிப்பதற்கான ஞானத்தையும் பெலனையும் வாய்ப்புகளையும் அளிக்கிறார். (உபா.8:18; நீதி. 22:4). அன்பான தேவ ஜனமே, நம்மை ஆசீர்வதிப்பதே தேவனுக்குப் பிரியம். நாம் மேற்கூறிய வேத ஆலோசனைகளின்படி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்போது, தேவன் நம்முடைய பொருளாதாரத்தை ஆசீர்வதிப்பார்! விருத்தியடையச் செய்வார்!



# வாலிபனே! போர்வீரனாய் போராடு

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள வாலிபர்களுக்கு ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். 2012, ஆம் ஆண்டு டிசம்பர் 30ம் தேதி கிரிக்கெட் உலகில் பரம எதிரிகளான இந்தியா - பாகிஸ்தான் அணிகள் முதல் ஒருநாள் போட்டியில் மோதின. உலகமே இந்த போட்டியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இந்த போட்டியில் வெல்ல வேண்டும் என்று இரு அணிகளும் பல யுக்திகளுடன் தலை சிறந்த வீரர்களை களமிறக்கியிருந்தது. முதலில் விளையாடிய இந்திய அணியின் சிறந்த வீரர்கள் ஒற்றை இலக்க ரன்களில் ஆட்டமிழக்க இந்தியா பேட்டிங்கில் தடுமாறியது. வெறும் 29 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து விட்டது. உலகமே அந்த கணம் அதிர்ச்சிக்குள்ளாகியது. கிரிக்கெட் ரசிகர்கள் பெரும் ஏமாற்றத்திற்குள்ளானார்கள். அப்போது களமிறங்கிய அணியின் கேப்டன் **M.S.**டோனி நம்பிக்கையூட்டும்படி விளையாடி இந்தியாவின் ரன் உயர போராடினார். அந்த போட்டியில் டோனி 125 பந்துகளில் 113 ரன்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றார். சொற்ப ரன்களில் இருந்த இந்தியாவின் மொத்த ரன்கள் 227 ஆக முடிந்தது. அந்த போட்டியின் வர்ணனையாளர் டோனியை, ஒரு போர்வீரனாக சித்தரித்து புகழ்ந்தார்.

அன்பார்ந்த வாலிபர்களே, கிறிஸ்தவ வாழ்க்கையிலும் பவுல் நம் ஒவ்வொருவரையும் கிறஸ்துவுக்காக ஒரு போர்வீரனாக இருக்க அழைக்கிறார் (2 தீமோ. 2:3). வாலிபர்களாகிய நாம் பொல்லாங்கனை ஜெயிக்க அழைக்கப்பட்டவர்கள் (1 யோவான் 2:14). பாவம் நிறைந்த இந்த உலகத்தில் நாம் ஜெயமுள்ள வாழ்க்கை வாழ நம்முடைய மாம்ச பெலத்தில் முடியாது. பல நேரங்களில் நாம் முயற்சித்து முடியாமல் விழுந்து போய் இருக்கலாம். பல முறை தீர்மானித்தும் நாம் தோற்றுப்போய் இருக்கலாம். சில நேரங்களில் முயற்சித்தும் பயனில்லை என்று எண்ணி நாம் முயற்சி எடுக்காமலே விட்டிருக்கலாம். ஆனால் நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றி பெறவே தேவன் விரும்புகிறார். நமக்கு உதவியும் செய்கிறார். வேதத்தில் நமக்கு பல ஆலோசனைகளும், பல வழிகளையும் தேவன் தந்திருக்கிறார். நம் நடைமுறை வாழ்க்கையில் அதனை பின்பற்றினால் நாம் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியும்.

நாம் பிசாசின் தந்திரங்களுக்கும், அவனுடைய செயல்களுக்கும் எதிர்த்து நிற்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபேசியர் 6:11). பிசாசுக்கு எதிர்த்து நிற்காமல் நாம் பரிசுத்தமாய் வாழ முடியாது.பிசாசு எல்லா சூழ்நிலைகளிலும் நம்மை பாவத்தில் விழச்செய்து நம்மை சிக்க வைக்க முயற்சிப்பான். பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல வகை தேடி சுற்றித்திரிகிறான் என்று வேதம் கூறுகிறது (1 பேதுரு 5:8). பரிசுத்தமாய் வாழ நாம் இந்த காலக்கட்டத்தில் பல போராட்டங்கள் போராட வேண்டியுள்ளது. ஒரு கிரிக்கெட் வீரன் சர்வதேச போட்டிகளில்

பாதுகாப்பு உடை இல்லாமல் விளையாட முடியாது. ஒரு போர்வீரன் பாதுகாக்கும் கருவிகள் இல்லாமல் போரிட அனுமதி இல்லை. அதுபோல நம்மை சுற்றி பாவம் செய்ய பல வாய்ப்புகள் இருக்கும் இந்த தொழில்நுட்ப உலகில் நம்மை தற்காத்து ஜெயமுடன் வாழ தேவனுடைய சர்வாயுத வர்க்கம் நமக்குத் தேவை என்று பவுல் நமக்கு எபேசியர் 6 ம் அதிகாரத்தில் விளக்கி கூறியிருக்கிறார். அவைதான் சத்தியம் என்னும் கச்சை (Belt), நீதி என்னும் மார்க்கவசம் (BreastPlate), சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை (Shoes), விசுவாசம் என்னும் கேடகம் (Shield), இரட்சணியம் என்னும் தலைசீரா (Helmet), வேதவசனமாகிய ஆவி என்னும் பட்டயம் (Sword). இரட்சிப்பு, வேத வசனம், விசுவாசம், சத்தியம், நீதி, சுவிசேஷம் இவையனைத்தும் கிறிஸ்தவ வாழ்வில் அனைவருக்கும் இருக்கவேண்டிய அடிப்படை குணங்கள். இவையனைத்தும் ஒரு மனிதனிடம் இருக்குமேயானால் நாம் நம்முடைய வாழ்க்கையில் பிசாசையும் அவனுடைய தந்திரங்களையும் கண்டறிந்து நிச்சயமாக ஜெயிக்க முடியும். இவை எல்லாவற்றிற்க்கும் மேலாக பரிசுத்த ஆவியானவர் நமக்கு துணை நின்று நம்மை போதித்து நடத்துவார்.

வாலிபர்களே, இந்த குணாதிசயங்கள் நம்முடைய வாழ்வில் இருக்கிறதா? என்று ஆராய்ந்து பாருங்கள். இதிலே வளர ஜெபியுங்கள், பிரயாசப்படுங்கள். தேவன் இந்த உலகில் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை

பாஸ்டர். **ஜோஸப் சாமுவேல்**

**2023 May 14, Sunday**

**மே 14, ஞாயிறு**




**தாய்மார்கள் தினம்**

தாய்மார்களுக்காக
சிறப்பு ஜெபங்கள், செய்தி உண்டு.
பங்குபெறுங்கள்!
ஆசீர்வாதம் பெறுங்கள்!

There will be special prayers and message
for the mothers on the Mother's Day Sunday Service
Come and Be Blessed!

**2023 June 18, Sunday**

**ஜுன் 18, ஞாயிறு**

தகப்பன்மார்களுக்காக
சிறப்பு ஜெபங்கள், செய்தி உண்டு.
பங்குபெறுங்கள்!
ஆசீர்வாதம் பெறுங்கள்!

There will be special prayers and message
for the fathers on the Father's Day Sunday Service.
Come and Be Blessed!




**தகப்பன்மார்கள் தினம்**

## நாம் தாங்கும் மிஷினரிகளுக்காக ஜெபியுங்கள்
## Pray for the Missionaries we Support



மிஷனரி. **சூரிய நாராயண தாபா** - திருமதி. **ரஞ்சிதா லாபாங் தாபா**
Missionary. **Surya Narayana Thapa** - Mrs. **Ranjitha Lapang Thapa**
(அஸ்ஸாம் - Assam)



மிஷனரி. **சாமுவேல்** - திருமதி. **சண்முக பிரியா**
Missionary. **Samuel** - Mrs. **Shanmuga Priya**
(மேற்கு வங்காளம் - West Bengal)



மிஷனரி. **இயேசு பிரகாஷ்** - திருமதி. **சுனந்தா பெல்லி**
Missionary. **Yesu Prakash** - Mrs. **Sunanda Belly**
(மஹாராஷ்டிரா - Maharasthra)



மிஷனரி. **ஜோசுவா பாக்**- திருமதி. **சில்பா பாக்**
Missionary. **Joshua Bagh** - Mrs. **Silpa Bagh**
(ஒடிசா - Odissa)



மிஷனரி. **யுவராஜ்** - திருமதி. **ஜெய்ஸ்ரீ**
Missionary. **Yuvaraj** - Mrs. **Jaishree**
(ராஜஸ்தான் - Rajastan)

---

# குடும்ப ஆசீர்வாத கருத்தரங்கு
# *Family Blessing Seminar*

நாள் :
**ஏப்ரல் 22 சனிக்கிழமை**

செய்தி மற்றும் ஆலோசனை அளிப்பவர்கள்

சகோ. **பீட்டர்**
சகோதரி. **சாலி பீட்டர்**
குடும்ப ஆலோசகர்கள், பாண்டிச்சேரி



**தலைப்பு**

- தேவனுடைய திட்டத்தில் திருமண வாழ்க்கை
- கணவன் – மனைவி வித்தியாசங்கள்
- பிள்ளை வளர்ப்பு

பதிவுக் கட்டணம் :
குடும்பத்திற்கு
ரூ.100/-

*திருமணமாகி பத்தாண்டுக்கு உட்பட்டவர்கள் கண்டிப்பாக பங்குபெறுங்கள். மற்றவர்களும் பங்குபெறலாம்.*

---

# VBS 2023

சிறுவர், சிறுமிகளுக்கான
**கோடைக்கால கொண்டாட்டம்**

**மே 01 திங்கள்** முதல்
**மே 06 சனி** வரை



# GOD IS LOVE

*Rev. Dr. Jerry Daniel*



Our God is a loving God. Love is his supreme attribute. John the 'Apostle of Love', declares that God is love (1 John 4:8). The first epistle of John is called as the 'Book of love'; the word 'love' occurs 48 times in this book alone. “God is love”- this statement gives us hope and encouragement. What is the nature of God's love? Let us explore what we can do to reciprocate it!

## I) GOD LOVES US

**1. God's Love is Sacrificial:**

God loved us so much that He gave his only begotten son for us (John 3:16; 1 John 4:9). Jesus expressed his love by laying down his life on the cross for us (1 John 3:16).

**2. God's Love is Unconditional:**

Jesus died for us while we were still sinners and manifested his love for us (Rom 5:8). The Bible says that Jesus did not love us based on our righteousness, works, talents and background but unconditionally (Deut. 7:7; 9:4-5; Job 7:17-18).

**3. God's Love is Forgiving:**

God's love is forgiving. It is like the love of a father who accepts his children as they are when they repent (Luke 15:18-20). This love called his betrayer as 'friend' (Matt. 26:50). God's love forgives and forgets our sins (Isaiah 38:17; Eph. 4:32).

**4. God's Love is Providing:**

God blesses us out of his love. He has compassion on us. He cares for us and supplies all our needs (Deut. 7:13; Rom 8:32; Matt 7:11; 1 Peter 5:7; Neh. 9:7-21).

**5. God's Love is Sanctifying:**

The Lord says, “those whom I love, I rebuke and discipline” (Rev. 3:19; Heb. 12:6). God afflicts and leads us in right path for our good, that we may be made more holy and bear much fruits (Ps. 119:67, 71; Jn. 15:2).

## II) DO WE LOVE GOD?

God expects us to love him as much as He loves us. Jesus asked Peter, “Do you love me?” (John 21:15-17). Jesus asks the same question to us today. When a believer loves Jesus, it will be manifested in five ways at least.

**1. Love for the Saviour:**

We ought to love Jesus, because He first loved us (1John 4:19). Jesus says, “Love the Lord your God, with all your heart and with all your soul and with all your mind” (Matt 22:37). God created us to relate with him. We have to

spend time with him in prayer; we must fulfill his desire in our life. The Bible repeatedly instructs us to love God in this manner (Deut. 6:5; 10:12; 11:1, 13, 22; 19:8; 30:16, 20; Joshua 22:5).

**2. Love for the Scriptures:**

Those who love God will also love his word. The psalmist expresses his love for God's word nearly 8 times in Psalm 119 (Psalm 119: 47, 48, 97, 113, 119, 159, 163, 167). The love he had for the word of God urged the psalmist to meditate and obey God's word. In fact, loving God is to obey his commands (John 14:15; 1 John 5:3). Bible says, "If anybody obeys God's word, the love for God is truly made complete in them" (1 John 2:5).

**3. Love for the Sanctuary:**

Our love for God will be evident in our love for his sanctuary. The church was bought with the blood of Jesus. Those who despise church are sinning against Jesus (Heb. 10:25). King David, a man after God's own heart reveals his earnest desire to dwell in the house of the Lord all the days of his life (Psalm 27:4). Further he shares delightfully, "I rejoiced with those who said to me, let us go to the House of the Lord" (Psalm 122:1). They that love the Lord will gladly serve in the church. They would endeavor sincerely to fulfill the vision of the church. They would also cheerfully contribute towards the ministerial needs (1 Chron. 29:3-7).

**4. Love for the Saints:**

The Bible says, "Whoever does not love their brother or sister, whom they see, how can he love God whom he has not seen"? (1 John 4:20,21). The Bible teaches us many a times that we must love one another (John 13:34; Eph. 5:2). We must pray for one another and help those who are needy (James 2:16; 1 John 3:17; Gal 6:10). We ought to forgive one another (Eph. 4:32). And above all love one another (1 Pet. 4:8).

**5. Love for the Unsaved:**

Christ came into the world to save sinners (1Tim 1:15; Luke 19:10). God wills that everyone must be saved (1Tim 2:4). Those that love God will know this heart throb of God and act accordingly. We need to intercede for the salvation of our unsaved relatives, friends, neighbours, people of our city and country. Apostle Paul, who cried, "the love of Christ compels us", prayed for the salvation of people; proclaimed gospel; labored hard and even gave up his life. Does God's love stir us to work and give towards gospel?

God measures our life on the basis of love. Although we might possess all knowledge and full of talents, if we do not have love, we are nothing. What do we in response to the love of Calvary? He who does not have love does not know God. Why? Because God is Love (1 John 4:8). Can people say of us, "See how much he/she loves?" (John 11:36).

## BIBLICAL WAY TO FINANCIAL BLESSINGS
## (From the Book of Proverbs)

In the book which contains a wealth of wisdom, let us dig out from it the wisdom concerning wealth and finances. Solomon, the author of the book is one of the wealthiest persons who ever lived on this earth. With the help of the Holy Spirit he has given us several of God's way sand principles for financial blessings in the book of proverbs. I would like to share some of them in this article. As you learn and live by these principles, God will certainly bless you financially!

**1. SERVE God with your finances.**

To serve God with your finances means to put God first in your finances. Proverbs 3:9-10 says, "Honour the Lord with your wealth, with the first fruits of all your crops; then your barns will be filled to over flowing, and your vats will brim over with new wine (NIV)." The Bible is full of promises that the Lord will provide for you, that he will meet your every need (Ps. 34:10; Phil. 4:19; Matt. 6:33). But God's promise comes with a premise: Put him first in your finances, and he will take care of you. Serving God with your finances means giving to the Lord's work, financing the church and the expansion of the gospel. As a steward, you must learn to manage God's resources faithfully in a way that brings Him glory. Don't do anything with your money that would violate God's word and bring dishonor to God's name and God's church. When you put God first in your finances, you are acknowledging that He is the source of all blessingsi n your life.

**2. SHARE with those in need.**

Proverbs is filled with verses about sharing with those in need.Proverbs 11:24-25 says, "Give freely and become wealthier; be stingy and lose everything. The generous will prosper; those who refresh others will themselves be refreshed. Proverbs 19:17 says, "If you help the poor, you are lending to the Lord—and he will repay you!" Proverbs 21:13 says, "Those who shut their ears to the cries of the poor will be ignored in their own time of need. Proverbs 28:27 says whoever gives to the poor will lack nothing. Isn't it clear? God gives you more than you need to help those who are in need. And his promise of provision for us is contingent upon us sharing freely with those in need.

**3. SKETCH out a plan**

Thirdly, plan ahead. You will never get ahead financially unless you plan to get ahead financially. The old saying tells us that if we fail to plan, we plan to fail. Proverbs 21:5 says, "Good planning and hard work lead to prosperity, but hasty shortcuts lead to poverty." Any good financial plan begins with goals and a good budget. Your goals are the "what" of your plan, and the budget is the "how." You and your spouse, if you're married, need to sit down and set financial goals together. Ask questions such as: What about tithing? What about charities? What is your plan for your children's education? What do you want to do for a living? What kind of home do you want to live in? What kind of vehicle do you want to drive? Proverbs 24:27 says, "Do your planning and prepare your fields before building your house."

**4. STRAIN every nerve**

The fourth financial principle from Proverbs is called hard work. The Bible is clear that the reason for poverty, in many cases, is simply laziness. Proverbs 10:4, "Lazy people are soon poor; hard workers get rich. Proverb 13:4 says, "The soul of the sluggard craves and gets nothing, while the soul of the diligent is richly supplied. Proverbs 14:23 speaks of labour leading to profit, but mere idle talk leading to poverty (Read also Proverbs18:9; 19:15; 20:4, 13; 21:25,26; 22:13; 24:20-34; 26:13-17). We need to work hard without becoming workaholics. We must learn to rest and relax. We should work to live and not live to work. The Lord instituted weekly rest for our physical, mental and spiritual health.

**5. SAVE for the future.**

One reason many people struggle financially is because they don't save. Any good financial plan will involve a plan for savings. Proverbs 6:6-11 talks about savings. If ants are smart enough to gather food for the winter, we should be, too. The best financial advice that I've come across goes like this. After taxes and tithes, save 10% and live on the rest. Imagine if you saved 10% of your income every month! Part of your savings should go into a savings account so you can be prepared for unexpected expenses and unforeseen contingencies. Proverbs 10:16 says, "The earnings of the godly enhance their lives, but evil people squander their money on sin." And Proverbs 21:20 says, "The wise have wealth and luxury, but fools spend whatever they get."

**6. STEER CLEAR of speculative investments.**

The next financial principle is to avoid speculative, shaky investments. Many people end up in financial bondage because they violate these clear, scriptural warnings. What are these speculative investments?

**1. Going into debt.**

Scripturally speaking, borrowing is not debt. The Bible doesn't say it's wrong to borrow. It says it's not a good idea to borrow. Proverbs 22:7 says, "The borrower is servant to the lender." When you borrow without the means to repay, or when you borrow without knowing exactly how you're going to repay, that's going into debt. Someone said, the bottom line on debt is this: (1) Never put a lender in the place of God by depending upon the lender to meet your needs, and (2) Never play God by determining that the only way to meet your needs is to borrow.

**2. Co-signing.**

This is one of the most violated financial principles in the Bible. Co-signing relates to debt. Anytime you co-sign you become legally responsible for the debt of another. The bible discourages co-signing. Proverbs 22:26-27 says,

"Don't agree to guarantee another person's debt or put up security for someone else. If you can't pay it, even your bed will be snatched from under you." Proverbs 17:18 also says the same thing. Many people buck God's word in this area and find themselves in trouble.

**3. Get-rich quick schemes.**

Proverbs 13:11 says, "Wealth from get-rich quick schemes quickly disappears; wealth from hardwork grows overtime". And Proverbs 28:20 says, "The trust worthy person will get a rich reward, but a person who wants quick riches will get into trouble." People who want to get rich quickly are susceptible to scams and fraudulent offers. They are invariably cheated and swindled. Stay away from gambling, betting and lottery. Avoid any form of get rich quick schemes (Pro. 23:4, 5; 28:22). Proverbs 12:11 says,"A hard worker has plenty of food, but a person who chases fantasies has no sense."

**7. STOP wasteful spending.**

Proverbs 10:16 says, "The earnings of the godly enhance their lives, but evil people squander their money on sin". Many people are struggling financially and are missing out on God's best in their finances because they are squandering their money. To squander is to spend wastefully on things that are worthless. Someone said, "Many times people buy things they don't need with the money they don't have to impress people they don't like." Never buy impulsively anything you do not really need. Do not buy things to impress other people. Many people are in debts and are struggling to make both ends meet, not because they don't make enough, but because they're squandering their money. Here's a list of questions to help you think before you buy: Think before buying. Have I prayed about it? Before I pay, I pray. Is it necessary? Does it reflect your Christian ethic? Is it the best buy? Is it an impulse item? Would my spouse agree with the decision to purchase? Does it add to or detract from the family? Will this enhance my life? Is it a highly depreciative item? Does it require costly up keep?

**8. SEEK God in prayer**

Finally, we need to seek God in prayer for our financial blessings. Unless the Lord gives us the strength and wisdom and blesses the work of our hand and keeps us from unnecessary and unexpected expenses, we will not be able to prosper. The Bible says, `the blessing of the Lord makes a person rich and he adds no sorrow with it" (Pro. 10:22). He who trusts in the Lord shall prosper (Pro. 28:25). The Lord delights in the prayers of the righteous and answers them with his blessings and riches (Pro. 15:8, 29: 22:4). So let us pray diligently and trust God with all our heart so that he will grant us his strength and wisdom to gain wealth (Pro.3:5,6; Deut.8:18) and make us a blessing to others (1Tim.6:17,18)!

Dear children of God, God loves you and cares for you. That is why he has given us guidelines in His Word for financial blessings. If we seriously and sincerely put them into practice, we will surely be able to prosper financially in God's way. May God bless you and prosper you!

*Scripture quotations are taken from NLT.*

# A TRUE WITNESS FOR CHRIST

Today many churches lack to be "A true witness for Christ". The reason many churches lack this witness is because the members are not discipled for this commission. Many Christians are not able to effectively present their testimony because they speak without preparation and without waiting upon the Lord for right guidance.

When testimonies are being given by members, the work of the church prospers in the right direction, but where there is no testimony, the work of the church comes to a standstill. This seems like a very risky procedure; but no one can deny that this is Christ's plan for the expansion of His church.

Every individual needs to hear "the testimony of the Lord" from a person that belongs to Christ. It is not enough to pray for our neighbors who do not know the Lord. It is not enough to live a good Christian life before our neighbors. "They need to hear the Gospel and need to hear the testimony of what the Lord has done for you".

In Acts 9:10-17, after Saul was visited by the Lord Himself on the Damascus road, yet the Lord sent Ananias to visit Saul with a testimony. In Acts 10, Cornelius whose prayers and good life merited an angel's visitation, had to wait for the visit and testimony of Peter, to tell him how he and his house might be saved.

When we read through the scriptures, we find the Ethiopian eunuch, Lydia and the Philippian jailor – all had to wait for a testimony from the servants of the Lord, before they could be saved. Many of us have excuses for speaking for Christ, remember our words are our testimony, and a good life is a confirmation of that testimony.

Our neighbors may not be able to see our true inner self, we may show them our good deeds in many ways, still they will not know whether we are Christian or Humanitarian. We may help them in their need, but unless we speak of the love of Christ, they will not know we are believers in Christ.

Our neighbors may be waiting to hear the testimony of how the Lord has transformed our lives, many of us try to keep this a secret. A burning lamp can't be hidden, but must shine forth its light. How will our neighbors know about our Lord, if we don't tell them.

Faith, prayer, a godly life style with good works are the roots for a testimony that will glorify God. Roots without a tree cannot bear fruit. Neither can a tree bear fruit except it have roots. Some of us have faith, prayer, spiritual experience, a good life style with good works – but no testimony. Therefore, we have no fruit.

Jesus said in Matt 5:16: "Let your light so shine before men, that they may see your good works, and glorify your Father which is in heaven".

On the other side, we see people, living in a prospective community, bearing at times a loud testimony in words only, but because of inconsistencies in their lives they have no "fruit unto holiness." On the other hand, we know many who excel in faith and prayer and spiritual experience and generosity and kindness; but because they do not bear witness by word of mouth, they have no fruit.

It is our testimony that produces the fruit, because it challenges people to find Christ. Sometime we hear people say: "It wasn't anybody's preaching that made me a Christian. It was my mother's prayerful life style, that made me want to be a Christian".

Our life and testimony are needed to show the way of salvation. 1 Cor 1:21says "It pleased God by the foolishness of preaching (testimony) to save them that believe". "How then shall they call on Him whom they have not believed? And how shall they believe in Him of whom they have not heard? And how shall they hear without a preacher?"

"How beautiful are the feet of them that preach the Gospel of peace, and bring good tidings of good things" (Rom. 10:14-15).

Every child of God, is ordained by Christ to be a " A Witness." The power to bear witness was poured out on ordinary people. Every child of God is intended to be a Spirit-anointed witness, to bear a testimony to the Lord and Saviour, Jesus Christ.

The Bible says "You Shall Receive Power"

The Holy Spirit was sent to lead the church on earth, giving power to its members to expand the church by their testimony. The Holy Spirit is given to all who obey the Lord (Acts 5:32). That is, to them that obey His Word, "Ye shall be witnesses unto Me." The Lord gives His power to those that are obedient, but not to self-pleasers.

The Holy Spirit's mission is to revive the church unto evangelism, as He draws the lost to Christ (John 6:44).

Brethren no one who disobeys the call of Christ to witness for Him, can have a real spiritual experience in this life, nor receive much of a reward in the next.

The book of Daniel 12:3 says "they that be wise shall shine as the brightness of the firmament; and they that turn many to righteousness as the stars for ever and ever".

Let us pray for our ears to hear the cry of the people, "What shall we do?" and let us be ready to answer their question by telling them about Christ.

*Bro. Claudy Quinn*

I will make a helper suitable for him. Gen 2:18

# AGAPE CHRISTIAN MATRIMONY

*Helping you to find your life partner*

*Venue :* **CITY REVIVAL AG CHURCH**

**Tuesday & Friday at 4.00 p.m to 6.30 p.m**
**Thursday at 10.30 a.m to 1.00 p.m**

**Contact : 98438 51115**



# ஆண்கள் ஐக்கியம்
## Men's Fellowship

**ஒவ்வொரு மாதமும் 3-வது திங்கட்கிழமை மாலை 6.30 மணி**

ஆண்கள் அனைவரும் பங்குபெறுங்கள்.

# பெண்கள் எழுப்புதல் ஜெபம்
## LADIES REVIVAL PRAYER

**வியாழன் தோறும்**
**காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை**



# வாலிபர் ஐக்கியக் கூடுகை
## Youth Fellowship



*முதல் மற்றும் மூன்றாம் ஞாயிறு*
*மாலை 4.30 மணி*

வாலிப சகோதர, சகோதரிகள் அனைவரும் பங்குபெறுங்கள்.

## Your Offerings and Donations Can Be Sent to

A/c Name : City Revival AG Church
A/c Number : 35354599169
Bank Name : STATE BANK OF INDIA
IFSC Code : SBIN0000930
Branch Code : 00930

A/c Name : City Revival AG Church
A/c Number : 1196172000007824
Bank Name : KARUR VYSYA BANK
IFSC Code : KVBL0001196
Branch Code : 001196

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am, 11.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st & 3rd Sunday-4.30 pm | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Men's Fellowship | 3rd Monday -<br>மூன்றாம் திங்கள்<br>7.00 pm - 8.30 pm | ஆண்கள் ஐக்கியம் |
| Youth Fellowship | 1st & 3rd Sunday<br>முதல் மற்றும்<br>மூன்றாம் ஞாயிறு<br>4.30 pm - 6.00 pm | வாலிபர் கூடுகை |
| Prayer Cells | Wed/Thu -<br>புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | 1st Friday -<br>முதல் வெள்ளி<br>6.30 pm - 9.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | 4th Friday -<br>நான்காம் வெள்ளி<br>9.00 a.m - 9.00 p.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

**Assistant Pastors**

Pr. I. Joseph Samuel
88700 74415
Pr. S. Santhosh Yobu
95973 28741

**Scan & Give**

Paytm  G Pay  PhonePe

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

## PRAISE & WORSHIP SERVICES

### EVERY SUNDAY

**Tamil Service - 7.00 a.m, 11.00 a.m**
**English Service - 9.00 a.m**
**Evening Service - 6.30 p.m**

### ஞாயிறு தோறும்

தமிழ் ஆராதனை 7.00 மணி, 11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**

No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

**Anointed and Lively Worship, Soul-stirring Music & Practical, Life-changing Messages**

***Come with your friends & family & Receive the blessings of God***



**Sunday School is conducted for kids below 14 years**






**Rev. Dr. JERRY DANIEL**

Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org